# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை
**********************

### இந்திய நிதி அமைச்சின் பேராளர்களது விஜயம்

இலங்கை மத்திய வங்கி மற்றும் தொடர்புடைய ஏனைய ஒழுங்குபடுத்தல் முகவர் நிறுவனங்கள் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கான இரண்டாம் கட்ட ஆளுமை விருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக 2025 நவம்பர் 12-ம் திகதி முதல் 14ஆம் திகதி வரையில் இந்திய அரசாங்கத்தின் வருவாய்த் துறையின் நிதி நடவடிக்கை பணிக்குழு (FATF) பேராளர்கள் இலங்கைக்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். இந்த இந்திய பேராளர்களில் நிதி புலனாய்வுப் பிரிவு (FIU), FATF பிரிவு, இந்திய ரிசர்வ் வங்கி (RBI), இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) மற்றும் இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆகியவற்றின் நிபுணர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

2. நிதித்துறை சார்ந்த மேற்பார்வை, ஒழுங்குபடுத்தல் ஒருங்கிணைப்பு, நிதித்துறையில் மேலெழும் சவால்கள் உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்பினை வலுவாக்குதல் தொடர்பாக இந்த நிகழ்ச்சி திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கி, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கையின் ஏனைய நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த பயிற்சி அமர்வுகளில் கலந்து கொண்டிருந்தனர்.

3. ஒழுங்குபடுத்தல்கள் மேற்பார்வை செயற்பாடுகள், துறை சார்ந்த அணுகுமுறைகள், பிரத்தியேக விடயங்கள் சார்ந்த கலந்துரையாடல்கள் மற்றும் தனியார் துறையினருடனான அனுபவப் பகிர்வு போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியதாக இந்த அமர்வுகள் காணப்பட்டிருந்த அதேவேளை, நிறுவன ஆளுமைகள் மற்றும் இணக்கச் செயற்பாடுகளை மேம்படுத்தலுகான நடைமுறை சார்ந்த பரிணாமங்கள் தொடர்பில் இந்திய நிபுணர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கு இந்த அமர்வு வழிவகுத்திருந்தது.

4. இந்த விஜயத்தின் அங்கமாக இப்பேராளர்கள் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் சிரேஷ்ட தலைமைத்துவத்தினரை சந்தித்து தற்போது காணப்படும் ஒத்துழைப்புகள் மற்றும் தொடர்ந்து அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான துறைகளை அடையாளம் காணுதல் தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர். அதுமட்டுமல்லாமல் டிஜிட்டல் மயமான கொடுப்பனவுகளில் இந்தியாவின் அனுபவம் குறித்த நுண்ணறிவுகள் மற்றும் மெய்நிகர் சொத்து சேவை வழங்குனர்களுக்கான ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு தொடர்பாகவும் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

5. இந்த விஜயமானது முன்னர் நடைபெற்ற மெய்நிகர் தொடர்புகள் மற்றும் இந்த வருடம் ஒக்டோபரில் நடைபெற்ற முதல் கட்ட ஈடுபாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த உத்வேகத்தின் அடிப்படையில், ஒழுங்குபடுத்தல் தயார்நிலையை மேம்படுத்துதல், இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் உலகளாவிய தர நிலைகளுடனான ஒழுங்குபடுத்தல்களை உறுதி செய்தல் ஆகிய நோக்கங்களுடன், மேலதிக மெய்நிகர் அமர்வுகள் மற்றும் இரு தரப்பினர் இடையிலுமான ஈடுபாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

************

**கொழும்பு**
**19 நவம்பர் 2025**